[illegible]

௩-ம் புத்தகம்

பத்திரகிரயம்
1௵ 2—12—0
6௴ 1—8—0
3௴ 0—14—0
1காபி - 0—2—6
இலங்கைக்கு 3—8—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்

௰௫-ம் இலக்கம்

பத்திரகிரயத்தைமணியார்டராக வாவது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிலாகவாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்மானேஜருக்குஅனுப்புதல்வேண்டும்.

[illegible]

சிதம்பரம்:— ௧௮௮௯௵ ஜனவரி௴ ௩௧௳ சர்வதாரி௵ தை௴ ௨௰௨

[illegible]

[illegible]

[illegible]

ஆரியாசாரம்

(தொடர்ச்சி.)

தமது பூணூலை மாலையாக்த் தரித்தலின்றி ஓர் காலமும் மலங்கழித்தல் கூடாது. அறியாமையால் அங்ஙனம் செய்ய நேர்படின் அப்பூணூலைத்தள்ளிப் பிறிதொன்றைக் கொள்ளல்வேண்டும். ஓரே வஸ்திரந் தரித்திருப்பவன் தன் பூணூலையாவது வலது செவியிற்றரித்தல் அக்காலத்துக்கின்றியமையாததாம். தைலக்காப்பு வபனம் புணர்ச்சிமுதலிய கிரியைகளில் உடனே ஆசமன விதியின்படி தண்ணீருட்கொண்டு பிறகே தன்னுடலினின்றும் மலங்களைக் கழித்தல்வேண்டும். அக்காலததில் ஒன்றும் பேசுதல் கூடாது. மலங்களையும் மற்றை அசுசியுள்ள பதார்த்தங்களையும் உற்றுநோக்குதல் கூடாது. மனக்கவலையுற்று வீணில் நெடுங்காலம் அசுசியான இடங்களில் உட்காரலாகாது. சிறு பாத்திரங்களில் எடுத்த தண்ணீரைக் கொண்டே மலங்களை நீக்கிக்கொள்ளல் வேண்டும். அத்தண்ணீர் முன்னரே எடுக்கப்பட்டுச் சுத்தமானவிடத்தில் வைக்கப்பட்டதாயிருத்தல் வேண்டும். மிர்த்திகையும் தண்ணீரும் அவ்வசுசிகாலத்தில் கைபிற்றரித்தல் கூடாது. அம்மலங்கள் உடலில் மற்றெவ்விடத்திலும் பற்றாத ஐயமற முற்றிலுமொழியத் தண்ணீர் மண் முதலியவற்றால் சுத்திசெய்தல் வேண்டும்.——வழியில் ஐந்து முறையும்——குறியில் இரண்டு முறையும் கைகளிலும் கால்களிலும் ஏழு முறையும் மண்ணினால் சுத்திசெய்தல் வேண்டும். இச்செயலுக்குக் காணக்கூடிய பயன் துர்நாற்ற நீக்குதல். இனி மனம் சுத்தி பெற்று மேல் முடிக்கவேண்டிய கடன்களை முடிக்க அதிகாரத்தை உண்டாக்குதல் இதற்கு ஊக்கமுள்ளோர் அறியத்தக்க உட்பயன். இனி அநேக தர்மசாஸ்திரங்களில் மண்ணிடலைப்பற்றிப் பற்பல வேறுபாடுகள் காணப்படினும் அவை அவ்வவ்விடத்தின் தாரதம்மியங்களாலென்றறிந்து ஒன்றுடனொன்று முரணாது பொருள் படுத்தி அந்நெறிநின்றொழுகுதல்வேண்டும். அதுபற்றியே "விஷ்ணுஸ்" என்னும் முனிவர் தாம் எழுதிய சூத்திரத்தில் "அவ்வம் மண்ணின் ஆற்றலறிந்து

[illegible]

நாற்றமற மண்ணிட்டுப் நீக்க மண்ணிடல்வேண்டும்” என்றார். இனித் தண்ணீர் எடுக்கப் பாத்திரம் கிட்டாவிடில் ஓடுகின்ற தண்ணீருக்கு ஒரு முழ தூரத்திற்கப்பால் உட்கார்ந்து கையினால் தண்ணீர் எடுத்து அக்காரியத்தைச் செய்தல் வேண்டும். பின் அவ்விடத்தை எவ்விதத்திலேனும் சுத்திசெய்துவிடுதல் வேண்டும். இதே கருத்தை “விவஸ்வான்” என்பவர் வெளியிட்டிருக்கின்றார். ‘தண்ணீருக்கப்பால் ஒரு முழதூரத்தில் உட்கார்ந்து சௌச விதியை முடித்துப் பின் அவ்விடத்தையும் சுத்தி செய்தல் வேண்டும்” என்று. இது பொதுவிதியாம். இரவிலும் மார்க்கங்களிலும் எவ்விதமேனும் சரீரத்துக்கு ஓர் சுத்தி சம்பாதித்தல் வேண்டும். ஆசலினாலன்றோ “சுசியுள்ளானைக் கடவுளர் பிதுர்க்கள் பின்பற்றுவார்கள். மற்றை இராக்ஷதர்கள் பைசாசர்கள் இவர்களை விட்டு நீங்கிவிடுவர்” என்று ஆன்றோர் கூறுவர். சரீரசுத்தியினும் மனச்சுத்தி பெறுதல் உயர்வுடைத்தென்று ஆசிரியர் தக்கர் கூறுகின்றார். ஆதலால், எவ்வித சரீர சுத்திக்கும் மனச்சுத்தி இன்றியமையாததாம். அச்சுத்தி உலகெலாங்கடந்த உண்மைப் பொருளாய அப்பரவஸ்துவின் தியானத்தாலன்றி வேறெவ்வாற்றானும் நிலைபெறாதென்பது ஆசிரியர் வாதராயணர் சாற்றும் மெய்யுரையாம். அஃதாவது: “சரீரசுத்தி பெற்றவனேனும் பெறாதவனேனும் எவ்வவத்தையில் இருப்பினும் எவன் கமலக்கண்ணனைக் கருதுவானோ அவன் உள்ளும் புறம்பும் அத்தியந்த சுத்தன்” என்பதாம். பின் சசையை இறக்கி நின்றுகொண்டு இடப்புறந் திரும்பி வாய்கொப்பளித்தல் வேண்டும். இங்ஙனம் விதித்தது நமது முகத்தின் உட்புறத்திலுள்ள மலங்களை நீக்குதலால் நாம் காணக்கூடிய பயன் பெற்றது. அதை இடப்புறத்தே செய்தல் வேண்டுமென்று கூறியதுமட்டில் அறிஞர்க்கே புலப்படற்பால பயன் பெறுவதாம். சரீரத்தின் வலப்புறத்தில் தேவதைகள் பிதுர்கள் ரிஷிகள் இயோரிருப்பதால் அவர்களிடம் ஓர் குற்றம் பெறாமல் தண்ணீரை மற்றவிடம் கொப்பளித்தல் வேண்டுமென்பது நூலாசிரியர் கருத்து. மலநீக்கத்திற் பன்னிரண்டு முறையும் சலநீக்கத்தில் நான்கு முறையும் கொப்பளித்தல் வேண்டும். உடனே கீழ்த்திசை அல்லது வடதிசையை நோக்கிக் கையைக் குவித்துக் கடவுளை நினைந்து ஓர் உளுந்தமிழ்ந்த சலத்தை உட்கொள்ளல் வேண்டும். இக்கருமம் ஆசமனம் என்று சொல்லப்படும். இதைத் தண்ணீரில் நின்றுகொண்டும் தரையில் உட்கார்ந்துச் செய்தல் வேண்டும். தண்ணீரில் ஓர் காலும் மற்றோர் கால் தரையிலும் வைத்தும் செய்யலாம். மூன்றுதரம் ஆசமனஞ்செய்தபிறகு பெருவிரலடியால் இருமுறை உதடுகளைத் துடைத்தல்வேண்டும். பெருவிரலையும் மோதிரவிரலையுங் கூட்டிக் கண்களையும் பெருவிரலையும் சுட்டுவிரலையுங்கூட்டி மூக்கையும் பெருவிரலையும் சுண்டுவிரலையுங் கூட்டிக் காதுகளையும் எல்லாவிரல்களாலும் மார்பையும் பெருவிரலால் சிரத்தையும் தொடுதல்வேண்டும். மேற்குறித்த எல்லா அவயவங்களையும் பெருவிரலான்றானே தொடினும் தொடலாம். பைடீனஸ் யென்பவர் “அக்கினி பெருவிரலிலிருத்தலால் அதுகொண்டே எல்லா அவயவங்களையும் தொடலாம்” என்று விதித்தார். இடையில் தரித்த உடை உலர்ந்திருந்தால் தண்ணீரில் உட்கார்ந்தும் அங்ஙனமில்லையாயின் நின்றுகொண்டும் ஆசமனஞ் செய்தல் வேண்டும். மற்றோர் கர்மத்துக்கு அங்கமாக ஆசமனஞ்செய்ய நேர்ந்தால் அதைக் கையிற் பவித்திரமணிந்தே செய்தல் வேண்டும். இவ்வாசமனம் அகச்சுத்திக் கருவியாதலால் இதன் பயன் அறி

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

தற்கரியதேயென்க. ஆசமனீயஞ் செய்த பிறகு அப்பவித்தி ரத்தை அவிழ்த்து எறிந்துவிடுதல் வேண்டும். எக்காலத்தும் பொன்னாலமைத்த பவித்திரம் தரிக்கத்தக்கதே. வெள்ளியால் மோதிரம் சுட்டுவிரலில் அணிதல் வேண்டும். பிதுர்தேவதைகளுக்கு வெள்ளி மிகப் பிரீதியுள்ளதாதலாலும் அதில் விழுந் தண்ணீர் அவர்க்குபயோகமாகும்படி நேருமாதலாலும் அதை அவ்விரலிலேயே தரித்தல் ஆவசியகமாம். தண்ணீர் கிடையா தவிடத்து தனது வலது காதைத் தொட்டால் அதுவே ஆசமனீயமாகும். அவ்விதம் செய்தல் வேண்டுமென்பதைச் சந்திரிகை யென்னும் ஓர் நூல் விளக்குகின்றது. அஃது "ஜப ஹோம காலங்களில் சேர்களைக் கண்டாலும் மற்றை நாய்முதலிய இழிந்த ஜீவஜெந்துகள் தீண்டக் கோர்ந்தாலும் உடனே ஆசமனஞ் செய்தல் வேண்டும்; அல்லது வலக்காதில் தொடுதல் வேண்டும்" என்பதாம். சம்வர்த்தனென்பவர் "தும்மல், காறியுமிழ்தல் பற்கடித்தல், பொய் சொல்லல் ஈனரோடு பேசுதல் என்னு மிச்சமயங்களில் வலதுகாதிற் றொடுதல் வேண்டும்" என் கூறியிருக்கின்றார். எத்தொழிலும் ஆசமனஞ் செய்தே செய்ல்வேண்டுமெனபது பாரத்துவாசர் கருத்தாம். "கை கால்மும் இவைகளைக் கழுவிக் கிழக்குத்திசையை நோக்கி ஆசமனஞ்செய்து மற்றைக் கிரியைகளைச் செய்தல் வேண்டும்" என்று எப்போதினும்கொள்க. குக்குடாசனத்திலிருந்தே ஆசமனஞ் செய்தல்வேண்டுமென்று சாண்டில்லியர் விதித்தார். அவர் கூற்றிது: "முழங்கால்களிரண்டின் இடையே கைகளை அடக்கிக் குக்குடம்போலிருந்து தர்ப்பணம் ஆசமனீயம் தந்தசுத்தியாதியவை செய்தல் வேண்டும்." என்பது.

இலத்தூர்ச் சுந்தரராஜசாஸ்திரியார் செய்தருளிய சதாசார சந்திரிகையின் முதற்பாகம் முற்றிற்று.

இந்து டிராக்ட்டு சொஸைட்டியின் வருஷோற்சவம்.

சென்னையின்கண் ஸ்தாபித்துள்ள இந்து டிராக்ட்டு சொஸைட்டியின் வருஷோற்சவத்திற்காகச் சொஸைட்டியார் உள்ளூர் வெளியூர் மெம்பர்களுக்கெல்லாம் நோடீசு அனுப்பினார்கள், உள்ளூரிலுள்ள ஏனையோர்க்கு ஆயிரக்கணக்கான விளம்பரங்கள் இறைத்தார்கள்; பெரிய எழுத்து இங்கிலீஷ் தமிழ் நோடீசுகள் வீதிவீதியாய் ஒட்டினார்கள்; கனவான்களுக்கும் தனவான்களுக்கும் அழைப்புப் பத்திரமும் நடக்கும் நடவடிக்கைகளும் அடங்கிய கார்டுகள் அனுப்பினார்கள். வெளியூர்களிலும் இங்கிலீஷ் தமிழ் பெரிய எழுத்து நோடீசுகள் அனுப்பியொட்டச்செய்தார்கள். பத்திரிகைகளிலும் விளம்பரஞ் செய்தார்கள். வாடகை வண்டிக்காரர்களெல்லாம் அபிமானத்துடன் மேற்படி பெரிய எழுத்து நோடீசுகளை வாங்கி வண்டிகளில் ஒட்டிக்கொண்டார்கள். நோடீசில் கண்டபடி ௧௮௮௯ வரு ஜனவரி-மீ ௧௬-உ புதவாரம் மாலை ௪-மணிக்குச் சென்னை பச்சையப்பன் சபாமண்டபத்தில் ௨-ஆயிரம் ஜனங்கள் வரையில் கூடினார்கள். அனேகம் பேர் இடமில்லாமல் பக்கத்திலும் வெளியிலும் நின்றார்கள். இடங்கிடையாமற்போமென முன்பாகவே அதாவது: சபை கூடுவதற்கு ௨-மணி காலத்திற்கு முன்னரே அனேக ஜனங்கள் வந்து கூடினார்கள். அம்மண்டபம் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அழ

[illegible]

கிய கொடிகளும் அம்மண்டபத்தைச் சுற்றிப் பறந்துகொண்டிருந்தன. சமஸ்கிருத பண்டிதர்களும், தமிழ் வித்துவான்களும், பி. ஏ., எம். ஏ.-க்களும், வக்கீல்களும, பத்திரிகாசிரியர்களும், கனவான்களும், தனவான்களும், ஜமீன்தாரர்களும், வர்த்தகர்களும், கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் நிறைந்திருந்தார்கள். வெளிநாடுகளிலுள்ள கிளைச் சபைகளினின்று பிரதிநிதிகளும் வந்தார்கள்.

அப்போது ம-II-II-ஸ்ரீ பாரிஸ்டர் பி. வி. இராமசுவாமி ராசு அவர்கள் சபாநாயகராய் வீற்றிருந்தார்கள். பிறகு மேற்படி சொஸைட்டியின் அக்கிராசனுதிபதி அவர்கள் பிரம்மஸ்ரீ சிவசங்கர பண்டியா பி. ஏ. எப். டி. எஸ். அவர்கள் கடவுள் பேரில் சமஸ்கிருதத் தோத்திரம் செய்தார்கள். செய்தவுடன் பூனா கான சமாஜத்தாரென்னும் சங்கீத சங்கத்தாரால் பிடில் சுரமண்டலி முதலிய கருவிகளுடனே இனிமையாகச் சங்கீதம் வாசிக்கப்பட்டது.

பின் ப்ரம்மவித்தியா பத்திராதிபரும், இ. டி. சொஸைட்டியின் வெளியூர் உப அக்கிராசனுதிபதியும், கௌரவ மெம்பருமான பிரம்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாச சாஸ்திரியாரவர்களும், இ. டி. சொஸைட்டியின் கௌரவ மெம்பரும, சமஸ்கிருத பண்டிதருமான ஸ்ரீமான் சித்தாத்துக்காடு ஸ்ரீனிவாசாசாரியாரவர்களும், திருவாவடுதுறை யாதீன வித்துவானும் ஞானமிர்த பத்திராதிபருமான ஸ்ரீலஸ்ரீ சபாபதிநாவலரவர்கள் தமிழ்ப்பாஷையிலும், மேற்படி ஸ்ரீநிவாசசாஸ்திரியார் சகோதரர்பட்டஸ்ரீபால சரஸ்வதி கு. நாராயணசாஸ்திரியாரவர்கள் சமஸ்கிருதத்திலும்,மேற்படி இ. டி. சொசைட்டியின் கௌரவ மெம்பர் மகாமகோபாத்தியாய பரவஸ்து ஸ்ரீமான் வேங்கடரங்காசாரியாரவர்களும், ஆந்திரபிரகாசிகை பத்திராதிபர் ம-II-II-ஸ்ரீ ஏ. சி. பார்த்தசாரதிநாயுடு அவர்கள் தெலுங்குப்பாஷையிலும, பாமதகண்டனம் ப்ரம்மஸ்ரீ வேங்கடகிரிசாஸ்திரியாரவர்கள் மலையாளத்திலும், மேற்படி "இந்து டிராக்ட் சொஸைட்டி"யின் அக்கிராசனுதிபதி அவர்கள் ப்ரம்மஸ்ரீ ராமநாத சிவசங்கர பண்டியா பி. ஏ., எப். டி. எஸ். அவர்கள் இங்கிலீஷிலும் சொஸைட்டியின் அபிவிருத்தியைப்பற்றியும், இந்துமத மேன்மையைப்பற்றியும், புறமதங்களில் இந்துக்கள் சேர்வதைத் தடுப்பதைப்பற்றியும், அங்கிலேய கவர்ன்மெண்டின் நிஷ்பக்ஷபாதத்தைப்பற்றியும் பிரசங்கம் செய்தார். முடிவில் சபாநாயகரவர்கள் எழுந்து இவர்கள் பேசியதையெல்லாம் தொகுத்து வெகு அழகாகப்பேசினர். பின்னர் சபாநாயகரவர்கட்குக் காரியதரிசி அவர்கள் ஸ்ரீமான் உ. அ. கிருஷ்ணமாசாரியார் பி. ஏ அவர்கள் அலங்காரமான புஷ்பமாலை போட்டு பன்னீர் தெளித்தனர். அதோடு சபை கலைந்தது.

இச்சபை வெகு அமரிக்கையாயிருந்தது. பிரசங்கிகளுடைய சாமர்த்தியத்தைக் கூற எம்மாலாகாது. கேட்டவர்க்கே தெரியும். இப்படிப்பட்ட பிரசங்கத்தை யாம் கேட்டறியோம்! பலமதஸ்தாகளாயிருந்தும் சகோதரர்கள் போல் ஒற்றுமையாய்க் கூடினர்கள். உள்மதக்கலகங்களை யொழித்தார்கள். "அவர்கள் பிரசங்கம் இனி யென்று நடக்குமோ" வென்று யாவரும் எதிர்பார்க்கிறார்கள். அடிக்கடிக் கர தாளங்கள் போட்டார்கள். மகா மகோபாத்தியாய கௌரவ மெம்பர் பிரசங்கம் தொடங்கியபோதும் முடிந்தபோதும் நெடுநேரம் கைகொட்டினர்கள். இங்கிலீஷ் படித்தவர்கள் சுதேச பாஷா வித்துவான்களை இல

[illegible]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑌭𑌾𑌷𑌾.

𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌂

[𑌅𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃]

[illegible]

ட்சியம் செய்வதில்லை. அவர்கள் அப்போது தேனில் விழுந்த ஈயைப்போல திகைத்துக் கேட்டார்கள்; வைதிகர்களும் லௌகிகர்களும் ஐக்கியப்பட்டார்கள். இன்னும் எம்மட்டோ நன்மைகள் விளைந்தன. இவ்வளவுதூரம் கொணர்ந்த "இந்துடிராக்ட் சொசைட்டி"யின் காரியகர்த்தர்களுக்கு அனேக வந்தனம் செய்கின்றோம். அவர்களுக்குச் செலவோ வெகு சொற்பம்; நடந்த காரியங்களோ மிக அதிகம். அந்தச் சொஸைட்டியின் நிர்வாக சபையார், பரோபகாரத்தைக் கருதி மனோவாக்கு காயங்களால் வெகு கஷ்டப்பட்டார்கள். தொடக்கத்தில் சொஸைட்டி இவ்வளவு விருத்திக்கு வருமென்று அவர்கள் கருதவேயில்லை. பரமேஸ்வரனது அனுக்கிரக பலத்தாலும், பாஷியமயிஸதாது அபஜயகாலத்தாலுமே இவ்வளவு விருத்திக்குவந்தது மறுவருஷோற்சவம் இதைவிட நாலுமடங்கு அதிகமாக நடக்குமென்று நினைக்கின்றோம். இச்சொஸைட்டியினால் இந்துக்களுக்கு மதாபிமானம் மேன்மேலும் அபிவிருத்தியாகின்றது; கிறிஸ்துமதத்திற்கு இந்துக்கள் செல்வது தடுக்கப்படுகின்றது; சபைகள் விஸ்தரிக்கின்றன; பிரசங்கங்கள் பலப்படுகின்றன; ஐக்கியமுண்டாகின்றது; இன்னும் இச்சபையால் எவ்வளவோ க்ஷேமமுண்டாகப்போகின்றது. ஆதலால், மேற்படி சொஸைட்டியை யாவரும் அபிமானிக்கவேண்டும்; வாக்குச் சகாயம், சரீரப்பிரயாசை செய்தல்வேண்டும்; இப்படிச் செய்துவருவோமாயின், இந்தியா முற்றும் இந்துமதம் நிரம்பி, அக்கிரமஸ்தர்களினது பொய்மத மொழிந்துபோகும்.

இச்சபைக்கு ஒவ்வொரு ஊர்களிலும் கிளைச்சபைகள் ஏற்படவேண்டும்; மெம்பர்களும் சேரவேண்டும்; மதப்பிரசங்கம் செய்யவேண்டும்; வேதத்தை ஆதாரமாகக் கொண்ட ஒவ்வொரு ஆரியரும் ஐக்கியப்படவேண்டும். இந்தியாவிலுள்ள எல்லா ஜாதியாரும், எல்லா மதஸ்தருர், எல்லாப் பாஷைக்காரரும், எல்லா நடையுடை பாவனைக்காரரும் தேச க்ஷேமப்படும்பொருட்டு எப்படி நாஷனல் காங்கிரெஸ என்னும் மகாசபை கூடிவருகின்றார்களோ, அப்படியே இந்ததேசத்திலுள்ள வைதிக சம்பந்தமான மதஸ்தர் யாவரும் உள்பேதங்களைப் பாராட்டாமல் இந்துமத காங்கிரெஸ் என்னும் மகாசபை ஒன்று ஊர்கடோறும் கூடவேண்டும். அப்போதுதான் நமது மதம் நிலைப்பட்டுக் கிறிஸ்துமதம் நமது ஜோலிக்கு வாராமல் தூரநிற்கும். இந்து வைதிக மதத்திற்கு நல்லகாலம் வந்திருக்கிறதென்று நாம் சோம்பேறித்தனமாயிருத்தல்கூடாது. ஆதலால், ஆரியர்களே! இதையொவ்வொருவரும் கவனித்துப் பிறர்க்குஞ் சொல்லி அபிமானத்தை யுண்டுபடுத்துங்கள்.

ப்ரம்மவித்தியா.

சிதம்பரம்; சர்வதாரி-ஸூ தை-மீ ௨௰-௨ வியாழக்கிழமை.

சம்ஸ்கிருதபாஷை.

வியாகரணம்.

(தொடர்பு.)

பின்னர்க் காசிகாவிருத்தி முதலிய பலகிரந்தங்களை அக்காலத்து அறிஞர்கள் படித்துவந்தார்கள். அப்புத்தகத்தின் நடை மிகக் கடியதாதலால் இலக்கியங்களைப் பெரிதும் ஆராய்ந்து தே

[illegible]

றிய சிலருக்கே பயன்படத்தக்கதும் ஏனையோர்க்குப் பயன்படாததுமாய்ச் சிறிதுகாலஞ் செல்ல ஒளித்துப்போயதுபோலாயிற்று. பின்பு அனேகர் பற்பல கிரந்தங்களை விரிவாயும் சுருக்கமாயும் எழுதத் தொடங்கினர். அவர்கள் எழுதிவைத்த புத்தகங்கள் இப்பொழுது எங்கும் முற்றிலும் வழக்கத்திலில்லை. மாதவாசாரியரியற்றிய தாதுவிர்த்தியென்னும் கிரந்தமொன்றுமட்டில் இவற்றுள் காணப்படக்கூடியது. மற்ற லீலாசுவாமி முதலிய அநேகரெழுதிய புத்தகங்கள் இவையெனக் குறித்துரைக்கத்தக்க ஏதுக்கள் அகப்படவில்லை. இனி இப்பாணினி மகாரிஷியெழுதிய இலக்கண நூலிற்கண்ட சூத்திரங்கள் எல்லாவற்றையும் முற்றிலும் மாற்றி வேறொரு வழியாய் இலக்கியங்களைத் தெளிவுபெற விளக்கி வழுவறக்காட்டிய முக்தபோதம் பிராசாத முதலிய இலக்கண நூல்கள் போபதேவன் முதலிய பல வித்துவான்களால் இயற்றப்பட்டுள்ளனவேனும் இந்நூல்களையெல்லாம் வழிநூல்களாய்ப் பெற்ற ஸ்ரீபாணினியமென்னும் அம்முதனூல் ஒன்றே இவ்வாரியதேசத்து மூதறிஞர்கள் காயாடிவந்ததெனத் தெரியவருகின்றது. வடதேசங்களில் இப்பொழுதும் முக்தபோதமுதலிய புத்தகங்களைப் படிப்பவர்கள் சிலருளர். தென்னாட்டவர்க்கு அப்புத்தகத்தின் பெயரே தெரியவராது. இப்புத்தகஙகள் பற்பல பலவிடங்களில் இருப்ப அவைகளை ஒருங்கு சேர்த்துப் படித்து இலக்கியங்களை வழுவறத்தெளிய ஆற்றலற்ற ஆரியபாலர்களை நோக்கி அவர்களுக்கெனப் பிரக்கியாகௌமுதி யென்னும் ஓர் சிறு புத்தகம் சேஷகிருஷ்ணனென்னும் ஓர் பண்டிதரால் இயற்றப்பட்டது. அது தற்காலத்தவர் படித்துவரும் வையாகரண சித்தாந்தகௌமுதியென்னும் ஓர் அழகிய பெருநூல் வெளிவருமளவே பெருமை பெற்றிருந்தது. இனி அவ்வையாகரண சித்தாந்த கௌமுதியை இயற்றினவரைப்பற்றியும் அவராலியற்றப்பட்ட மற்றைய நூல்களைப்பற்றியும் சிறிது இங்கே கூறுவாம். ஸ்ரீகாசிக்ஷேத்திரத்தில் பண்டிதலக்ஷ்மீதரகவி யென்னும் பெயர் பெற்ற ஓர் அறிஞர் வெகுகாலம் வசித்திருந்தனர். அவர் அத்வைதசாஸ்த்ரமுதலிய பற்பல நூல்களை இயற்றினவரொன்றும் அதிசாந்தகுணமுடையவரொன்றும் நல்லொழுக்கங்களைக் கைக்கொண்டவரொன்றும் ஆரியர்கள் பலரும் புகழ்ந்து பாராட்டப் பதம்பெற்று வாழ்ந்திருந்தார். அவர் தமக்குப் புத்திரரில்லாது விசுவேசுரக்கடவுளை நோக்கி மனமுருகித் துதிசெய்ய அக்குணவள்ளலாகிய கண்ணுதலார் பேரருளால் பட்டோஜி என்னும் பெயருள்ள ஓர் புதல்வனைப் பெற்றெடுத்தார். இவர் சாதி மகாராஷ்டிரமென்பது. இவர்கள் வீட்டுப்பாஷை மகாராஷ்டிரம். இவர்கள் வேதம் இருக்குவேதம். இவர் மதம் ஸ்ரீசங்கரபகவத்பாதாசாரிய சுவாமிகளால் தாபிக்கப்பட்டுள்ள கேவலாத்வைதம். இவைகள் அவர் எழுதிய புத்தகங்களால் வெளியாகின்றன. இப்பட்டோஜி தீக்ஷிதரென்பவர் வேதசாத்திரங்களை நன்காராய்ந்து சிறிதுகாலம் ஓர் அரசாங்கத்தில் மந்திரியாயிருந்து பின் அநேக கிரந்தங்களை எழுதத் தொடங்கினர். இவர் எழுதிய கிரந்தங்கள் சப்தகௌஸ்துவம், வையாகரண சித்தாந்தகௌமுதி, பிரௌடமனோரமை, வையாகரணபூஷணம், தத்துவகௌஸ்துவம் முதலியனவாம். இவற்றுள் சப்தகௌஸ்துவமென்பது ஆசிரியர் பாணினியார் அருளிச்செய்த சூத்திரங்களுக்கு அவரருளிய முறை மாறாது பொருள்படுத்தும் விருத்தியுரையாயுள்ளதும் தொல்லாசிரியர் கருத்தறியாது பின் தோன்றிய நூலாசிரியர் எழுதிவிட்ட மயக்கப்பொருள்களைக்

[illegible]

களைந்து உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்துரைக்கும் ஓர் பெருநூலாம். இதன் கிரந்த சங்கியை உத்தேசம் 3600. இது மாபாடியமென்னும் பெருநூலை ஒத்து முப்பத்திரண்டு பாதங்களுடன் கூடியது. ஆயினும் வழக்கத்தில் முதற்பாதமொன்றே அதிகமாயிருக்கின்றது. அப்பாதமொன்றுமட்டில் வடதேசத்தில் காசிமாநகரில அச்சிட்டும் வெளியிடப்பட்டிருக்கின்றது. தென்னாட்டில் அருமையாய்ச் சில பண்டிதர்களிடத்தில் பதினாறுபாதம் வரையிலுள்ள புஸ்தகங்கள் அகப்படுகின்றன. வடநாடுகளில் ஏதோ சிலவிடங்களில் முற்றிலுமிருப்பதாய்க் கேள்வி. இனி வையாகரணசித்தாந்த கௌமுதி யென்பது பர்க்கிரியா கௌமுதிபோல் சந்திப்பிரகரணம் சத்தப்பிரகரணம் முதலிய பல பிரகரணங்களடங்கியதும் முற்பகுதி பிற்பகுதி யெனனும் இருபகுதிகளில் முறையே பெயர்ச்சொல் வினைச்சொற்களின் இலக்கணங்களைக் கூறிநின்றுள்ளதும் ஒவ்வொரு சூத்திரங்களுக்கும் பதவுரை பொழிப்புரை உதாரணம் பதப்பிரயோசனம் முதலிய அமையப் பெற்றதும் வினைமுற்றுப்பகுதிகள் அவைகளின் வேற்றுமை முதலியவைகளைத் தற்சிறப்பிலக்கணத்துடன் எடுத்துக்கூறி இலக்கணநூல் பயில விரும்பும் ஒவ்வொரு மாணுக்கருக்கும் முதலில் படிக்கத்தக்க புத்தகமாயிருக்கின்றது. இனி பிரௌடமனோரமையென்பது முன்பெடுத்தோதிய வையாகரண சித்தாந்த கௌமுதியின் ஓர் சிற்றுரையே. முற்கூறிய கௌமுதியிற்கண்ட சில சூத்திரப்பொருள்கள் முன்னாசிரியர் கொள்கைக்கு மாறுபாடெய்தியவிடத்து இஃதியாங்ஙனம் பொருத்தமுடைத்தென அறிஞர்களுக்குதிக்கும் ஐயமறப் பொருட் பொருத்தத்தினை விளக்குகின்றது. வையாகரண சிததாந்த கௌமுதி யெனபது பன்னீராயிரங் கிரந்த சங்கியையுள்ளது. பிரௌடமனோரமையென்பது பதினெண்ணாயிரங் கிரந்த சங்கியையுள்ளது. வையாகரணபூஷணமென்பது சொற்றொடர்புகளைப் பொருட்படுத்தும் வழியை எடுத்து விளக்கும் ஓர் சிறுநூல். தத்துவகௌத்துவமென்பதோ ஓர் வேதாந்தநூல். இது இரண்டு பிரகரணங்களையுடையது. முதற் பிரகரணத்தில் வைணவர் கொள்ளும் சம்ஸ்காரமாகிய சக்ராங்கணம் அவைதிகமெனத் தாபித்தலும் இரண்டாம் பிரகரணத்தில் மத்துவரென்னும் ஓர் சார்பினர் கொண்ட சித்தாந்தத்தை மறுத்தலும் ஆகிய இவை அமைந்திருக்கின்றது. இதனால் இவர் முற்றிலும் கேவலாத்வைதியேயாமென்பது தெள்ளிதிற் புலப்படுகின்றது. இதற்கு முதனூல் ஸ்ரீசங்கராசாரியசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய பிரமசூத்திரபாஷியமேயென்பது இந்நூலின் முகவுரையில் அவரால் எழுதப்பட்டிருத்தல் காண்க. இந்நூல் இயற்றிய காரணங்களின் வரலாறுகளைப்பற்றிப் பின்னர் எழுதுவாம்.

வைதர்ப்பிய வாசுதேவம்.

இந்நூல் திருவனந்தபுர சமஸ்தானத்தைச் சார்ந்த இலத்தூர் ஸ்ரீமத் சுந்தரராஜ சாஸ்திரியாரவர்களால் இயற்றப்பட்டது. இது மகாபாகவதத்திலுள்ள ஸ்ரீகண்ணபிரானது திவ்விய சரித்திரத்தைக் கவிமணியாகிய ரசிகர்களும் மதிசாத்திரம் வல்ல பண்டிதர்களும் அவைகளைக்கற்க விரும்பும் ஏனைய பிறரும் எளிதில் அறிந்துகொள்ளும்பொருட்டுச் சிருங்காரமுதலிய நவரசங்களும் இனிதுதோன்ற நாடக காவியரூபமாக இயற்றப்

[illegible]

''[illegible]''

[illegible]

[illegible]

பட்ட ஓர் சிறந்த நூலாம். இதற்கு முன்னரோயே சிறந்த கவிமணிகளாகிய நம் முன்னோர்களால் நவரசங்களும் நிறைந்த சம்புமுதலிய பல காவியங்கள் மிகச் சிறப்புற இயற்றப்பட்டிருப்பினும் அவையெல்லாம் சிருங்காரமுதலிய நவரசங்களையே இனிது விளக்குவனவாயும், இது அந்நவரசங்களோடு மதாசார விஷயங்களையும் இக்காலத்தார்க்கு ஏற்றபடி எளிதாக எடுத்துக்காட்டுவனவாயும் அமைந்திருத்தலால், இது இக்காலத்தில் கல்விகற்க விரும்பும் யாவர்க்கும் மிக்க பயனைத்தரும் ஓர் சிறந்த அரிய காவியமாமென்று துணிந்து கூறுதற்கு எவ்வாற்றானும் பின்னிடேம். இனி மாந்தர்களுக்கு இம்மை மறுமையின்பங்களை ஒருங்கு பயக்கத்தக்கது மதாசாரவிஷயங்களேயாதலால் மாணுக்கர்கள் காவியபாடங்களைக் கற்க விரும்பும் இளமையிலேயே மதாசார விஷயங்களையும் அறிந்துகொள்ளுதல் உத்தமோத்தமமாதலினால், நம் ஆரிய வித்துவசிரோஷ்டர்களாகிய சைவ வைணவ கவிமணிகள் தாம்தாமியற்றும் நாடக காவியங்களிலும் ஏனை நூல்களிலும் மதாசார விஷயங்கள் யாவர்க்கும் எளிதில் தோன்ற அமைத்து இயற்றுவார்களாயின் அது இக்காலத்து நம்மவர்க்கு மிக்க பயனைத்தரும் ஓர் சிறந்த பெருபகாரச்செயலாம். ஆதலினால் நம் வித்துவசிரோமணிகள் இந்நற்செயலைக்கடைப்பிடித்து மேன்மேலும் இத்தகைய கிரந்தங்களை ஊக்கத்தோடு இயற்றி வெளிப்படுத்துவார்களென்று நம்புகின்றோம். இதில் ஒன்று நமது பார்வைக்கு அனுப்பியதற்காக நாம் அவர்க்கு அநேக வந்தனமளிக்கின்றோம்.

இந்நூலினை யாவர்க்கும் பயன்படுமாறு மிக்க சிரத்தையெடுத்துக்கொண்டு அச்சியற்றியளித்த பரோபகாரவள்ளலாகிய திருநெல்வேலி வைக்கீல் ம-ா-ா-ஸ்ரீ A. கிருஷ்ணசுவாமி ஐயரவர்களுக்கும் அநேக வந்தனம் புரிகின்றேம்.

இந்நூல் தேவநாகரலிபியில் அச்சிடப்பட்டிருக்கின்றது. இதன்விலை மிகக்குறைந்ததே. புத்தகம் 1-க்கு அணு 12-யாம்.

கடிதம்.

—:o:—

கடிதகர்த்தர்களுடைய அபிப்பிராயங்கள் பத்திராதிபரைச் சாரமாட்டா.

கதகர்கள்.

(முன் தொடர்பு.)

ஐயா,—இதற்குமுன் கதகர்களை மூவகைப்பேதங்களாகக் கூறி அவர்களில் முதல்வகுப்பைசசார்ந்த பாகவதர்களது திறத்தைக் கூறினும். இங்ஙனம் ஐதிகாசிகர்களுடைய பூர்வஸ்திதியையும் இந்நாள் ஸ்திதியையுங் கூறுவாம். இதிகாசமென்பது ஐந்தாம்வேதமென்று சொல்லக்கூடிய ஓர்வகைப் பிரமாணப் பிரபந்தம். இஃது புராணங்களிலெடுத்துச் சுருக்கிச் சொல்லியிருக்கும் முக்கியமான சில கதைகளை விரித்துக்காட்டவும், விவரமாயுள்ள சில கதைகளைச் சுருக்கிச் சொல்லவும் சுருதிகளிலும் ஸ்மிருதிகளிலும் சுருக்கிச் சொல்லிய சிலவிதப் பிரமாணப்பொருள்களை உதாகரணங்களோடு விவரித்துக் காட்டவும், வான்மீகர், வேதவியாசர், பரமசிவன் முதலியவர்களால் பிரகாசஞ்செய்யப்பட்ட பிரமாணநூல். இப்பொழுது இராமாயணம், பாரதம், சிவரகசியம், ஹரிபக்திசுதோதயம் என நான்கு இதிகாசங்களிருக்கின்றனவென்று கூறுகின்றார்கள். இவற்றுளும்

कथकाः.

अनुबन्धः.

—:0:—

आर्याः!!

[illegible]

இராமாயணமொன்றுதான் சாலவும் வழங்கப்பட்டுவருகின்றது. அரிதாய் மாபாரதம் கையாடப்படுகின்றது. மற்றைய விரண்டில் சிவரகசியமென்பதைச் சைவரும் ஹரிபக்திசுதோதயமென்பதை ஹரிபத்திசெய்பவரும் கையாடிவருகின்றார்கள். இதுநிற்க. கிருஷ்ணஜன்மகண்டமெனவும், ஹரிபக்தவிஜயமெனவும் இரண்டு இதிகாசங்கள் வல்லப மதத்திலுள்ளவர்களாலும், முற்றிலும் வல்லபமதங்களுக்குரிய வாசாரங்களைத் தழுவிய பாகவதர்களாலும் முறையே கொண்டாடப்பட்டுவருகின்றன. இவற்றுள் ஹரிபத்திசுதோதயம், கிருஷ்ணஜன்மகண்டம், ஹரிபக்தவிஜயம் இம்மூன்றிதிகாசங்களுக்கும் புராணங்களில் எட்டுணையேனும் பிரமாணங்களில்லை. இவ்விஷயத்தை இங்கு நிறுத்திப் பிறகு விசாரிப்பாம். இவ்விதிகாசங்களை ஜனங்களுக்கு நன்கு புலப்படும்படி எடுத்துரைக்கு மறிஞர்களுக்கு ஐதிகாசிகர்களெனப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கின்றது. முற்காலத்தில் இத்திறத்தோர் ஆலயங்கள், மதிநீரங்கள், திண்ணைகள், தீர்த்தங்கள், தெருக்கள், திருநாட்கூட்டங்கள், சபைகள் இவ்விதத்தலங்களி லுட்கார்ந்தும் நின்றும் இவ்விதிகாசங்களைச் சுருதிலயங்களுடன் பாடவும், சுலோகமாகவெடுத்துரைக்கவும், உள்ள பொருளை உள்ளவாறு காட்டி ஜனங்களின் நன்மார்க்கப் பிரவிர்த்தியையும் துன்மார்க்க நிவிர்த்தியையும் உண்டுபண்ணிச் சைவ வைணவவாதி மதத்துவேஷமில்லாது மோட்சமார்க்கமடையும் தர்மங்களை அவர்கட்குபதேசித்துவருவதுமாகவிருந்தது. ஆகையால். இவ்விதிகாசங்கள் நடக்குமிடத்துப் பெண்டுகளும், கல்வியிற் குறைந்த சூத்திரர் முதலியவர்களும் இக்கதையைக் கேட்கவும், சிலர் அதன் பொருளைச் சிறிது சிறிதுணர்ந்து நன்மைகளை நாடித் தீமைகளைத் துறந்து திருஞான திருட்டியுடையவர்களாயானார்கள். அக்காலத்தில் இத்திறத்தோரும் இவ்விதிகாசங்களும் ஜனங்களுக்கு வெகு உபயோககரங்களாயிருந்தன. இப்பொழுதோ! பாடத்தெரியாதவன் படிப்பனேல் அவ்விதிகாசத்தைக்கேட்பாரிலர். உள்ளபொருளையுரைப்பனேல் ஊர்க்கூட்டங் கூடாது. அதுகொண்டு இராகந் தெரிந்தும் தெரியாதும், கண்டமிருந்தும் இராதும், கையிற் றம்பூர் பிடித்து சுருதி ஒட்டியோ சுருதிவிட்டோ தொண்டையுடன் பிடித்த மூச்சுவிடாது பிறருக்குப் பாடமில்லாத மிகப் பெரிய சிட்டைகளைத் திருப்பித் திருப்பி ஒப்பிப்பவரும், உலக விருத்தாந்தங்களைச் சொல்லிக்கொண்டு ஊரெல்லாஞ்சுற்றி யுண்மைப்பொருளை யொளிக்கும் கனவான்களே பெரிய கதிகர்களாயினர். கதகனென்றால் கண்டருத்திராக்ஷமும், குமிழிமிதியடியும், பட்டுவேஷ்டியும், பெருத்த தம்பூரும் கூடவிருந்தாற்றான் ஜனங்கள் கூடுவதாகயிருக்கின்றது. கதை வைப்பவர்கள் சைவர்களேல் அவ்விடங் கதையுஞ் சைவமாயிருக்கும். வைணவரேல் கதையுமங்ஙனமே. இவ்வகைச்சிட்டை படிப்பதும் சீராட்டமாகிவதுமாகிவிட்டது. இக்கதைகளைக்கேட்டு இதற்குச் சம்பந்தமில்லாத சிலலூர்க கதைகளை இவர் சொ

[illegible]

[illegible]

௬௮- [illegible]

௬௯- [illegible]

௭௦. [illegible]

லலத் தெரிந்துகொண்டுவந்த சில அறிவீனர்கள் இக்கதை எவ்குளதென்று வித்துவான்களைக் கேட்கவும், அவர்கள் ஒழிக்கவும் இவர்கள் பழிக்கவுமாகயிருக்கின்றது. அந்தோ! ஆகையால் கதைகள் கேட்கும் கனவான்களும் நமதுதேயத்துத் தனவான்களுமாயொன்றுகூடி இக்கதைகளை உள்ளது உள்ளவாறு சொல்பவரிடங் கேட்டு உளமகிழ்தலாகாதா? அல்லது அவர்களையே யுண்மையான பொருள்களை யுரைக்கச்செய்து கேட்கலாகாதா? பிறர் மதத்தவர் நகைக்கப் பேரிடமாயிது இருக்கின்றதே! இக்கதகர்கள் இவ்விதிகாசங்களி லில்லாமல் மற்றையவோர் உபந்நியாசங்கள் புரிவதுபோல் செய்து தமது பாண்டித்தியத்தைப் பிரசுரஞ் செய்யலாகாதா? இவர்கள் கெடுக்க இதிகாசந்தான் அகப்பட்டதோ? விந்தை!

இன்னும்வரும்.

பாலநீதி.

(தொடர்பு.)

68. போதம் வளர்த்து வேதம் படித்து.
69. மறுமை நினையார் மறையை உணரார்.
70. மாயம் பேசுவோர் வாயை நம்பார்.
71. மித்திரபேதம் மெத்தவநீதம்.
72. மீத்துவை திரவியம் வார்த்திகத்தே நயம்.
73. முடங்கிய படிப்பு தொடங்குதற்கொப்பு.
74. மூர்க்கர் பழக்கம் முற்றமிழப்பம்.
75. மெதுவாய்ச் சொல்லு எதிரியை வெல்லு.
76. மேற்பட முயற்சி ஏறபடும் புகழ்ச்சி.
77. மைத்திரபலம் மகானுகூலம்.
78. மொய்த்திடுவார் தனம் வைத்திருக்குந்தனே.
79. மோசஞ்செய்பவம் மோக்ஷமாம் அநுபவம்.
80. யதார்த்தமாய் நட இருதார்த்தனுவாய்.
81. யாதனைப்படுவர் நாதனை நினையார்.
82. யோசனை மனதின் லோசனமேயாம்.
83. யௌவன வயதை செவ்வையாய்ப் போக்கு.
84. லஞ்சம் வாங்குவோன் பஞ்சமாய்ப் பறப்பன்.
85. லாகிரி வஸ்துவை நாவினுல் ருசியேல்.
86. வருத்தப்பட்டவர் திருத்தப்படுவர்.
87. வாசியோசி வசனித்து ருசி.
88. வித்தையும் வினயமும் மித்திரர்க்கொப்பாம்.
89. வீண்பேச்சுக்கு விநாடியுமிடங்கொடேல்.
90. வெறு மனிதனுருவம் அருவருப்பைத்தரும்.
91. வேததூஷணை விளைக்கும் வேதனை.
92. வையகம் புகழ மெய்வழியே நட.

பாலநீதி முற்றிற்று.

விக்கிரகாராதனம்.

(அநுபந்தம்.)

—:o:—

மூன்றாவது கேள்வி இது:—“வேதங்களின் கடவுள் புலனுணர்ச்சி பெற்றவனுய்க் கூறப்பட்டுள்ளான் அல்லது அங்ஙன

௭௧- [illegible]

௭௨- [illegible]

௭௩- [illegible]

௭௪- [illegible]

௭௫- [illegible]

௭௬- [illegible]

௭௭- [illegible]

௭௮- [illegible]

௭௯- [illegible]

௮௦- [illegible]

௮௧- [illegible]

௮௨- [illegible]

௮௩- [illegible]

௮௪- [illegible]

௮௫- [illegible]

௮௬- [illegible]

௮௭- [illegible]

௮௮- [illegible]

௮௯- [illegible]

௯௦- [illegible]

௯௧- [illegible]

௯௨- [illegible]

[illegible]

[illegible]

[illegible]

மில்லாதவனுய்க் கூறப்பட்டுள்ளான். முற்கூறியவாறெனின், எவன் பூசித்ததால் எக்காலம் அவருக்கு அவ்வுணர்வு தீரும்? அங்ஙன மில்லாதவனெனின், அவன் நித்தியப் பசியொழியுமாம செய்துவரும் நித்தியாராதன நிவேதனங்கள் சாஸ்திர விரோதமான காரியமன்று'' என்பது.

இவ்விதங் கேட்டதனால் நம் பிரதிவாதியார் கருத்து யாதெனில் எவ்வனும் கடவுளுக்கு உணர்வுண்டெனச் சாதிப்பனேல் அவனை "கடவுள் நம்போன்ற உணர்வு பெற்றவரல்லரென்று சொல்லின அவர் யானிடரோயாவரெனச் சொல்லி மறுக்கலாம்'' என்பதும் "அங்ஙன முணர்விலலாதவனெனின் அவருக்குத் தினந்தோறும் பன்முறை அன்னமளித்தல் அபசாரமேயாகுமெனக் கூறி மறுக்கலாம்'' என்பதுமாம். இதற்குச் சமாதானம் வருமாறு:—உலகெலா மொழிந்தவிடத்து உண்மைப்பொருளாய் விளங்கு. அப்புழுமுதலுக்கு எவ்விதப்புலனுணர்வும் எல்லோரு மறியத்தக்கதும் வேதங்களிலும் கூறப்பட்டுள்ளது. ஆதலானன்றோ "புலனுணர்வற்றவன் கர்மவிபாகமொழிந்தவன் சேதனன் கடவுளாவான்'' என்று ஆசிரியர் பதஞ்சலியார் தமியற்றி யோகசாத்திரத்தின்கண் கடவுளிலக்கணங் கூறினார். இதுவே வேதங்களினுட்கருத்து. இனிக் கடவுளுக்குப் [illegible] செய்துவரும் நிவேதனம் எவ்வாதம் ஒவ்வாதெனின், அந்தோ! நமது நண்பர் நிவேதனத்தின் உட்கருத்தைச் சற்றும் அறிந்தாரில்லை; அறிஞர்கள்பால் [illegible] அதனை அவனிடம் தெரிவித்தற்பொருட்டுச் செய்யும் ஓர் தொழிலே நிவேதனம் எனச் சொல்லப்படும். நிவேதனம் என்பது நி என்னும் ஓர் இடைமொழியோடு கூடிய வேத் என்னும் வடமொழிப் பிறவினை புற்றப் பகுதியினின்று அன விகுதிப்புணர்ச்சியிலமைந்தசொல்ல தலால் அதின்பொருள் அறிவுறுத்தலேயாமெனக. "நி+வேத்+அன=நிவேதன. வேத்= அறிவித்தல்'' இதனால் எவரும் இத்தொழில் கடவுள் பசிநீங்கச்செய்ததென ஒப்பினார்களில்லை. இனி "உம்மதத்தவரில் கடவுளுக்கு இந்நிவேதனத்தால் பசிதீர்கின்றதென நம்பினவர்களில்லையோவெனின், உண்மையே; அவ்விதம் ஆயிரக்கணக்கான ஜனங்களிருக்கின்றார்கள் அஃதொன்றைக்கொண்டு எவ்விதம் சகல வேதங்களாலும் வைதிகர்களாலும் ஒப்பி அநுட்டிக்கப்பட்ட இவ்விக்கிரகாராதனத்தை அவைதிகமென்றுவது அநியாயமென்றுவது வாதித்தல் அசாத்தியமும் நியாயவிரோதமுமாம். அறிஞர்களாயுள்ள ஒவ்வொருவர்களும் தாம் [illegible] கங்களைத் திருவாராதனஞ்செய்யும்பொழுது அங்கு நி[illegible] கடவுளுக்குப் பசிநீர்க்கச் செய்வதாய்த் துணிந்தார் [illegible] ன்பதுண்மை. இனி உலகத்தில் எவனேனுமொரு[illegible] ண்மையறியாது கடவுளுக்குப் பசியையொழித் [illegible] மெனக்கூறின் அதைப்பற்றி யாம் கவலையுற[illegible] றுமில்லை. ஆதலால் இக்கேள்வி அறிஞர்க[illegible] பாது அறிவீனர்களாகிய பாமரர்களே [illegible] ன்பதுணர்க.

[illegible]

[illegible]

இனி நான்காவது கேள்வியாவது "வாயுவின் பிரவேசத்திற்கு இடமில்லாத கல்லின்கண் சரீரத்துக்குள் சஞ்சரிக்கும் பிராணவாயு செல்வது யாங்ஙனம்? இதை வேதமந்திரங்களாலும் யுக்தியாலும் இதற்குச் சமாதானமளிக்கவேண்டியது" என்பதாம். இதற்கு விடை வருமாறு; ஐயா! இரண்டாங்கேள்விக்குவிடை இறுக்குமிடத்திற்றானே வேதங்களில் மந்திர முதலியவைகளைப்பற்றி எடுத்துத் தனித்தனி யிலக்கணங்களை விரித்தோமல்லவா? மந்திரங்களில் விதிகள் புலப்படாதென்பதல்லவோ அதன் கருத்து. ஆதலாற்றான் நமது நண்பரும் யுக்திகளாலாவது சமாதானமளிக்க வேண்டுமென்றார். ஆயினும் யுத்திகளித்தன்மையுள்ளன தம்மாற் கொள்ளற் பாலனவென்றும் அங்ஙனமில்லாத யுத்திகள் தம்மால் ஒப்பப்படமாட்டாதெனவும் பின்னே சொல்லப்போகின்றார். அவர் சொல்வது யாதெனில், நம்முன்னோர் எழுதிவைத்த ஆறு சாத்திரங்களிலுள்ள யுத்திகளே தாம் ஒப்புவனென்றும் மற்றையவற்றை ஒப்பமாட்டாரென்பதுமே. அக்கேள்வியில் முற்பாகத்தின் கருத்து யாதெனில் நம்முன்னோர் அவ்வளவு நல்ல யுத்திகளை ஆராயாது இவர் கொண்டதுபோல் பெரியோர் சொல்லே பிரமாணமெனக் கொண்டவரென்றும் ஒருசமயம் அவர்கள் ஏற்படுத்திய விஷயம் தற்காலத்துக்கு ஒத்துவந்தபோதிலும் அது அவர் திறமையால் அமைந்ததல்ல. மற்றுக் குணாக்ஷர நியாயத்தாலேயாக என்பதே. இவர் இங்ஙனங் கொள்ளினும் யுக்தியென்றேற்பட்டவைகளுள் சில சிறந்ததெனக்கூறுதல் எவ்விதமும் அமைவது கடினம். ஏனெனில் தற்காலத்தவரும் சோதனையிற் சிறந்த மற்றெவரும் தத்தங் கோட்பாடு வேறுபடினும் யுத்தி வேறுபடாத முக்கியப் பிரமாணமெனக் கொண்டிருக்கின்றார்கள். ஆதலின், அதை முற்றிலும் ஒப்பாதவர்போல் இவர் பேசியது நண்பர் நற்கருத்தல்ல. ஆதலால் நாம் இப்பொழுது இருவகை யுத்திகளையும் எடுத்துக்காட்டுவாம். வேதாந்திகளென்பவர்கள் யாம் காணும் பொருள்களெல்லாம் ஐந்து பூதத்தொகுதியாலுண்டாகின்றனவென்றும் அவற்றுள்ளும் ஒவ்வோர் பூதக்களும் ஐந்து பூதங்களின அம்சம் பெற்றலன்றி ஒவ்வொரு பொருளும் உண்டாகாதென்றும் சாதிக்கின்றாராதலால் கல்லின்கண் ஆகாயமும் (வெளி) வாயுவின் போக்கும் சூக்குமமாயிருக்குமென்பதிற் சிறிதும் தடையில்லை. இது தற்காலத்தவர் யுத்திப்பிரகாரம் சோதித்துப் பார்ப்பினும் இஃதுண்மையெனப் புலப்படும். அஃதெங்ஙனமெனில், தற்காலத்தவர் சித்தாந்தப்படி தண்ணீரென்பது இரண்டு காற்றுகளின் ஓர்வித விகுதி அங்ஙனமாயின் சிற்சிறு கற்களின்கண் உடைத்துப்பார்க்குமிடத்து யாம் தண்ணீரிருக்கப் பார்க்கின்றோமாதலாலும் ஆங்கு வாயு சஞ்சாரமிருப்பதாய் அறியவேண்டியதேயாதலாலும் இவர் எடுத்த யுக்தி மணம்பெறுதொழிந்தது. இனி உண்மையை உற்றுநோக்கில் அங்கு சரீரத்தைவிட்டுப் பிராணன் செல்வதுமில்லை; அங்கு வாயு நுழைவதுமில்லை. ஆதலால் இக்கேள்வி அவ்வளவு சிறந்ததன்றாம். மற்றுமவை மற்றொருகால் வரும்.

ப். வி. ப.

—[illegible]—

[illegible]

[illegible]!! [illegible]!! [illegible] ''[illegible]'' [illegible]

[illegible] (Lord Lansdown) [illegible] (Howrah Station) [illegible] (Lord Dufferin) [illegible] (Income-Tax) [illegible] (Salt-Tax) [illegible] ''[illegible] (National Congress) [illegible]''

[illegible] (Allahabad) [illegible] (Delegates) [illegible] (Sir Auckland Colvin govr. N. W. P.) [illegible] (A member of the Parliament at Home) [illegible] (Barrister-at-law) [illegible]

[illegible] (Mr. Norton, Mr. Adam, Mr. Yool, Mr. Hume) [illegible]

[illegible] (Tol) [illegible] (Director of Public Instruction) [illegible]

[illegible] (Rupees Six thousand) [illegible] (already sanctioned) [illegible]

[illegible]

நூற்பெருமைவிளக்கம்.

இப்புத்தகமானது திருவனந்தபுரம் மகாராஜாகாலேஜ் இங்கிலீஷ் பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ M. A. சங்கரப்பிள்ளையவர்களால் இங்கிலீஷ் பாஷையிலுள்ள (Science) ரசாயனசாஸ்திரங்களை அவ்விங்கிலீஷ்பாஷைப் பயிற்சியில்லாத நம்மவர்கள் எளிதில் அறிதற்பொருட்டுத் தமிழ் மொழியிலே சூத்திரரூபமாகச் செய்து அதற்கு உரையும் எழுதி அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில் ரசாயனசாஸ்திர அதிநுட்ப விஷயங்களெல்லாம் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இது அந்நியதேசத்தவரான அங்கிலேயரால் கையாடப்பட்டு வருகின்ற நடையுடையதேயாயினும், கல்வியும் அறிவும் ஒருங்கே வழிப்பட்ட தன்மையாதலினாலும், இக்காலத்திலே இத்தகைய வித்தைகளை அதிசிரத்தையை எடுத்துக்கொண்டு மிக நுட்பமாக ஆராய்ந்து பலவழியானும் விருத்திக்குக்கொண்டுவரும் இடையறாப் பெருமுயற்சியை விரதமாகக்கொண்டு பற்பலகிரந்தங்களை அவர்தம் அங்கிலேயபாஷையிலே இயற்றி வெளிப்படுத்தியும் போதித்தும் வருதலினாலும், அவர் வித்தைகளையும் நாம் பிரீதியோடு பாராட்டி அதிலுள்ள சாராம்சங்களை அறிதற்கு இசைதலும் அவர் தன்மைக்கு மெச்சி மகிழ்தலும் நம்மவர்க்கு ஓர் ஆவசியகச்செயலேயாம். யாதினாலெனின், அவ்வங்கிலேய நாட்டினர் இத்தகைய அரிய வித்தைகளை அறியும் ஆற்றல் பெறுதற்கு எவ்வளவோ நெடுங்காலங்களின் முன்னரேயே இத்தேசத்தவரான நம் ஆன்றோர்களால் பற்பல கிரந்தங்களால் மிக்க சிறப்புற வெளிப்படுத்தப்பட்டிருப்பினும் இக்காலத்தில் அவற்றை ஆராய்ச்சி செய்து விருத்திசெய்வோர் சிலராயொழிந்தமையால் அவை இத்தகையதென்றும் நம்மவரிற்பலர் அறியாதிருந்த

விருலும், எவ்வளவோ பிரயாசையோடு புதிதாகக்கண்டுவிரு த்திசெய்யப்படுகிறதென்று அவரும் அப்பாஷைப் பயிற்சியே பெரிதுமுற்ற நம் ஆரிய பாஷைப் பயிற்சியைக் கைவிட்ட நம்மவரிற் சிலரும் கூறும் வேற்றுமைகளைக்கண்டு மயக்கும் நம்மனோர் இவை புதிதாக அல்லாமல் கண்டு விருத்திசெய்யப்படுவதேயாயினும் நம் ஆரிய சாத்திரங்களில் முன்னமே அமைந்துள்ளனவேயாமென்று தெளிந்துகொள்ளுதற்கு ஓர் சாதகமாயிருத்தலினாலுமென்க. இன்னும் அந்நூலிலே சொல்லப்படும் அவ்விஷயங்கள் நம் ஆரிய கிரந்தங்களிலேயுள்ள ரசாயன வித்தையின் சாராம்சங்களும் அக்கிரந்தங்களிலுள்ள சாராம்சங்களும் தெளிந்து இனிது செய்யப்பட்டிருத்தலால், நம்மவர் யாவரும் அதனை விருப்பொடு ஏற்றுப் பயின்றுவரின் ரசாயனசாஸ்திர உண்மை எளிதில் அறிந்துகொள்ளலாமென்பதை மனத்திருப்தியோடு கூற ஒருப்படுகின்றோம். இக்கிரந்தகர்த்தராகிய ம-ா-ா-ஸ்ரீ M. A. சக்கரப்பிள்ளையவர்கள் இத்தனை பிரயாசைபெருந்துக்கொண்டு இதனை இயற்றி அச்சிட்டு வெளிப்படுத்திய இப்பேருபகாரத்திற்கு மகிழ்ந்து நமமவர் யாவரும் அவர்களுக்கு வந்தனங் கூறும் கடப்பாடுடையராவதுமன்றி; பலரும் அப்புஸ்தகங்களில் ஒவ்வொன்று பெற்றுப் பயின்றுவருதலும் அத்தியாவசியகச் செயலாம்.

அப்புத்தகத்தில் ஒன்று நமது பார்வைக்கு அனுப்பியதற்காக அவர்க்கு நாம் மிக்க நன்றி பாராட்டுகின்றோம். இன்னும் பிள்ளையவர்கள் தாம் எடுத்துக்கொண்ட இந்நன்முயற்சியைக் கைசோரவிடாது ரசாயனசாத்திரப் பகுபாடுகளை விரித்துரைக்கும் இந்நூலின் பிரயோசனத்தை இனிதுவிளக்கும் ஏனைய பாகங்களையும் விரைவில் வெளிப்படுத்துவார்களென்று நம்புகின்றோம். இத்தகைய நன்முயற்சிகளை நம்மவரில் கற்றுவல்ல பிறரும் கடைப்பிடித்து இவ்வாறு செய்துவருதல் மிக்க பேருபகாரமாம்.

Editor.

உ

சென்னை

இந்து டிராக்ட் சொஸைட்டி வருடோற்சவச்சிறப்பு.

கண்டேம் கண்டேம் கண்களிகூடாத்
தண்டேன் சொரியும் தளிர்ப்பூஞ்சோலை
நாற்பாங்கோங்க நலம்பெறுசென்னை
மேற்பாங்கோங்கி விண்ணுறவிளங்கும்
பச்சையப்பன் பயந்திடுகாலேஜ்
உச்சிதமாகவுயர்மண்டபத்தில்
ஆயிரத்தெண்ணூற்றெண்பதிதொன்பது
மேவியஜனவரி மிளிர்பதினறில்
வந்திடுபுந்தி வாரமதனில்
இந்துடிராக்ட் சொஸைட்டியிதற்கு
வருடோற்சவந்தான் வளர்ந்தனவமம்
ஒருவாய்கொண்டேயுரைக்கற்பாற்றோ
நஞ்சிவசங்கரபண்டியாவுடனே
விஞ்சையிற்றேர்ந்த விற்பனர்பலரும்
மஹாமஹோபாத்தியாய மறையோருடனே
நிகரறுமாரியபண்டிதர்சிலரும்
இங்கிலீஷ்பட்டம் ஏற்றவர்பலரும்
பொருந்தியசெந்தமிழ்ப் புலவோர்பலரும்
ஒருங்குகூடியுபாசனத்தில்
இருந்துவிளங்கவியந்திடுமண்டபம்
விளங்கியகாக்ஷியும் வித்தகராவார்
உளமகிழ்ந்தோதுமுபந்நியாஸங்களும்
மண்டபமுகடே வான்முகடாக
எண்டிசைவிளக்கே யிசையுமவாகத்
தோற்றியகாட்சியுஞ்சொல்லிவிட வெளிதோ
போற்றினேனுக்கே புராந்தகனடிகள்
நாடிசவிண்டுவினற்பதநினைந்து
கூடியபெரியோர் குளிரமுக்கண்டு
இப்பாவகனுலென்னுளமகிழ்ந்து
செப்பாநின்றேன் சிறப்புகள் சிற்சில
மண்ணுலகுள்ளோர்யாவருமகிழ்ந்து
கண்ணெனுங்கண்போல்
இச்சபைதன்னிலியைந்து வாழ்வீர்
முச்சகமகிழ மூதுணர்வோரே.

இங்ஙனம்
இந்துமதாபிமானி.

கோபுசெட்டிபாளையம் வாலிபர்கள் சபையில், சுப்பிரமணிய சாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்ட உபந்நியாசம்.

(முன்தொடர்ப.)

ஆதாரமான சுத்தசைதந்நியப் பூரணமானகூடஸ்தப்பிரமமாக விளங்குமிடத்து சமமெனவும், அதில் ஆவிர்ப்பவித்த அறிவு ஜீவசுவா ஜகத்தாகவிருந்து ஒடுங்குமிடத்து விசேஷமெனவும், இங்ஙனமறித்தொடுக்கும் அறிவு உண்மையாயினும் அக்கிரியை கண்மித்தையெனக்கொள்க.

முற்கூறியஸ்தூலபிரபஞ்சத்தின் அத்தியாரோபம் இதனடியில் விரிவாகக்கூறப்படுகின்றன.

(அண்டத்தின் விவரம்)

கைலாசம், வைகுண்டம், சுவர்க்கம், அக்கினிலோகம், எமலோகம், ஈசான்னியலோகமென்கிற அநேகஆவாந்தரலோகங்களையும் அநேக ஜோதிக்கணங்களுடன்கூடிய ஜோதிச்சக்ரத்தையும், கிரகதி சமுத்திரங்களுடன் கூடிய அநேகதீபாந்தரங்களையும், அடக்கிக்கொண்டிருக்கிற அதல விதல சுதல ரசாதல தராதல மசாதல பாதாளங்களென்னும் கீழ்லோகங்கள் 7. பூலோக புவர்லோக சுவர்லோக மகாலோக ஜனோலோக தபோலோக சத்தியலோகங்களென்றுஞ்சொல்லப்படுகிற மேலோகங்கள் 7. அந்தந்தலோகத்தில் அவரவர்ஸ்திரீகளுடனும் பரிவாரங்களுடனும் வசிக்கின்ற இந்திரன்முதலிய அஷ்டதிக்பாலகர்கள், சூரியன் முதலிய நவக்கிரகங்கள், 33. கோடி தேவர்கள், பிதிருக்கள், அசுவனிதேவதைகள், 48- ஆயிரம்ரிஷிகள், 11. உருத்திரர்கள், 12. ஆதித்தியர்கள், 7. மருத்துகள் 8. வசுக்கள், கருடர், கந்தர்வர், கின்னரர், கிம்புருஷர்கள், யக்ஷகர், ராக்ஷஸர், 66. ஆயிரங்கோடி அசுரர் பூதங்கள், பேதாளங்கள், சாகினிகள் டாகினிகள், பிரேதங்கள், பைசாசங்கள், குக்யகர்கள் சித்தர்கள், வித்தியாதரர்கள், அப்ஸர

[illegible]கள், மானுடர்கள், மிருகங்கள், பட்சிகள், கிருமிகள், மரம் செடி புற்பூண்டுகள் என்பவை. ஜராயுஜ, அண்டஜ, சுவேதஜ, உற்பிஜங்களென்கிற நான்குவிதங்களான பூதசமூகங்கள் அவ்வப்பிராணிகளுக்கு உபயோகமான அன்னபானாதிகள், கடபடாதி சதசத்பதார்த்தங்கள் ஆகிய இத்தன்மைத்தப்பிரபஞ்சமானது ப்ரம்மாவாயிலாக முறை முறையே யுண்டானதாக விவகாரத்திற் சொல்லப்பட்டிருந்தபோதிலும் ஊர்ணநாபியென்னும் சிலந்திப்பூச்சியானது தன்சரீரத்திலிருந்து நூலையுண்டுசெய்வது போல், ஈசுவரன் தானே உபாதானகாரணமும், நிமித்தகாரணமுமாயிருந்து பிரபஞ்சரூபமானானென்பது சாத்திரங்களின் ஒட்டுஅபிப்பிராயமென்று தெரிந்துகொள்ளுக.

(நான்குவித பூதகிராமங்களாவன)

1. ஜராயுசமென்பது = கருப்பையிலிருந்துண்டாகும் தேவர், மனிதர் நாற்கால்மிருகங்களும்.
2. அண்டஜமென்பது = முட்டையிலுண்டாம் பட்சிகளும், கிருமிகீடங்களும், சலசந்துக்களுமாம்.
3. சுவேதஜமென்பது = வேர்வையிலுண்டாகும் பேன், மூகட்டுப்பூச்சி முதலியவைகளாம்.
4. உற்பிஜஜமென்பது = வித்து, வேர், கொம்பு கொடி கிழங்கு இவைகளிலுண்டாகும் செடி கொடி மரம் புல பூண்டு முதலியவைகளுமாம்.

(இன்னும் வரும்பின்)

" [illegible] "

[illegible]

[illegible]	௦	க	௦
[illegible]	௦	க	௦
[illegible]	௨	௦	௦
[illegible]	௦	க௨	௦
[illegible]	௦	௮	௦
[illegible]	௦	ச	
[illegible] (3 [illegible])	௦	க	
[illegible]	௦	௭	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௨	௦
[illegible] (3 [illegible])	க	௦	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	க	௦
[illegible]	௦	ச	௦
[illegible] (3 [illegible]) [illegible]	௦	க	௦
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௮	௦

[illegible]

[illegible]	௦	௫	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௬	௦
[illegible] ([illegible])	௦	௬	௦
[illegible]	௦	க	௦
[illegible]	௦	௫	௦
[illegible]	௦	க	௦

Printed and Published for the Proprietor at the Brahmavidya Press. Chidambaram.